Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.55/2023** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW3** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மூவேந்திரன் |
| Father/Husband Name | : | வையன் |
| Village | : | அண்ணாமலை நகர் |
| Taluk | : | ஆர்எஸ் மங்களம் |
| Calling | : | ஆசிரியர் |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025.

<u>(3 ம் எதிரி இறப்பு மற்ற எதிரிகள் ஆஜர். )</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது ஆர்எஸ் மங்களம் தாலுகா அண்ணாமலை நகரில் வசித்து வருகிறேன். நான் தேனி மாவட்டம் ராயப்பன்பட்டியில் உள்ள புனித அலோசியஸ் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அசா.1, செல்லம்மாள், அ.சா.2 ராதிகா, மற்றும் சா.சா.சங்கர் ஆகியோர்களை தெரியும். எனக்கு உறவுக்காரர்கள், உள்ளுர்க்காரர்கள். எதிரிகள் அனைவரையும் தெரியும், உறவினர்கள். கடந்த 02.05.2013 ம் தேதி இரவு 11.00 மணியளவில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டதால் வீட்டிற்கு வெளியே வந்து உட்கார்ந்து இருந்தேன். அந்த சமயம் அடிக்கடி மின்சாரம்

துண்டிக்கப்பட்டு மீண்டும் இணைப்பு கொடுக்கப்பட்டு வந்தது. நான் வெளியே உட்கார்ந்து இருந்த சமயம் திருடன் ஓடுகிறான் திருடன் ஓடுகிறான் என்று சத்தம் கேட்டது. அந்த நேரம் மின்சாரம் இல்லை என்பதால் இருட்டாக இருந்தது. ஊர்மக்களும் அந்த சத்தத்தை கேட்டு ஓடி வந்தார்கள். டார்ச் லைட்டை வைத்து ஊர்மக்கள் அடித்தார்கள். அந்த சமயம் பொக்கார் டார்ச் லைட் வெளிச்சத்தில் முகம் தெரியக்கூடாது என்பதற்காக வெளிச்சத்திற்கு எதிர்பக்கமாக ஓடினார். அந்த சமயம் எதிரே வந்த ஊர்மக்கள் பிடித்துவிட்டார்கள். அவரை பிடித்த ஊர்மக்கள் அவரிடம் ஏன் இந்த நேரத்தில் ஓடி வருகீறாய், திருடன்திருடன் என மக்களும் கத்திக் கொண்டிருக்கிறார்கள் என அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் மாடு பிடிக்க சென்றதாக கூறினார். அதற்கு ஊர் மக்கள் ஏன் இந்த நேரத்தில் மாடு பிடிக்க செல்கிறாய், ஓடிவருகிறாய் என்று கேட்டார்கள். அப்போது எழுவக்கா என்ற 70 வயது உள்ள பெண் என்னுடைய சேலையை பிடித்து தூக்கிட்டான் என சொல்லிக்கொண்டு ஓடிவந்தார். அந்த பெண்தான் சேலையை பிடித்து தூக்கிட்டான். நான்தான் திருடன்திருடன் என கத்தினேன் என கூறினார். எழுவக்கா என்ற 70 வயது பெண்ணை இறந்த பொக்கார் சேலையோடு தூக்கியது சம்மந்தமாக அவரது உறவினர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று ஊர்மக்கள் சொன்னார்கள். பொக்காரின் மகள் மகேஸ்வரி பாம்பனில் இருந்தார், அவர் என்னுடன் படித்தவர் என்பதால் நான் அவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். எனக்கு ராதிகாவின் நம்பரோ, மற்றவர்களின் நம்பரோ தெரியாது. நான் ராதிகாவிடம் சொன்னேனா என்று எனக்கு ஞாபகமில்லை. மகேஸ்வரி ராதிகாவிற்கு தகவல் கொடுத்திருக்கலாம். அதற்கு பின்பு அந்த இடத்தில், அந்த நேரத்தில் என்ன சம்பவம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை 08.00-9.00 மணியளவில் பொக்கார் பெருமாமடை அருகே பூச்சிக்கொல்லி மருந்து அருந்தி இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் பேரில் நானும், ஊர்க்காரர்களும் சென்றுபோய் பார்த்தோம். அவரது உடலை தூக்கிக்கொண்டு வந்து அவரது வீட்டில் சேர்த்தோம். என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை –

02.05.2013ம் தேதி இறந்த பொக்கார் இந்திரா என்பவரது வீட்டிற்கு கொடுத்த பணத்தை வாங்குவதற்காக சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் அனைவரும் பொக்கார் இந்திரா வீட்டிற்கு களவாட சென்றதாக தவறுதலாக நினைத்து கைகளை பின்னால் கட்டி அடித்தார்கள் என்றால் தெரியாது. எதிரிகள் அடித்ததால்தான் அவருக்கு மனஉளைச்சல் ஏற்பட்டு பூச்சிக்கொல்லி மருந்து வாங்கி குடித்து விட்டு இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரிகள் பொக்காருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்தார்கள் என்றும்,அந்த பணத்தை கட்ட முடியவில்லை என்பதால் அவருக்கு மனஉளைச்சல் ஏற்பட்டு பூச்சிக்கொல்லி மருந்து வாங்கி குடித்து விட்டு இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரிகள் பொக்காரை தாக்கியது சம்மந்தமாக நான்தான் அவரின் மகள் ராதிகாவிற்கும், மகன் சங்கருக்கும் தகவல் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்றால் எல்லோரும் உறவினர்கள். எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களை காப்பற்றவேண்டி போலிசார் விசாரணையின்போது கூறியுள்ள சங்கதிகளை மறைத்து உண்மைக்கு புறம்பாக தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C.55/2023** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW2** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | ராதிகா |
| Father/Husband Name | : | சாமிநாதன் |
| Village | : | பாண்டியூர் |
| Taluk | : | பரமக்குடி |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025.

(3ம் எதிரி இறப்பு மற்ற எதிரிகள் ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் பரமக்குடி தாலுகா பாண்டியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்க்கிறேன். சாட்சி பட்டியல் சா. 1 சங்கர் என் அண்ணன், அ.சா.1 செல்லம்மாள் என் அம்மா, சா.ப.சா.மூவேந்திரன், காளிமுத்தன் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 3ம் எதிரி இராமன் என்கிற இராமநாதன் என்பவரை தெரியும். அவர்கள் அனைவரும் எங்கள் ஊர்க்காரர்கள். கடந்த 02.05.2013ம் தேதி இரவு 11.00 மணிக்கு மூவேந்திரன் எனக்கு போன் மூலம் உன் அப்பாவிற்கு முடியவில்லை உடனே வாருங்கள் என தகவல் சொன்னார். நாங்கள்

பாண்டியூரிலிருந்து அண்ணாமலை நகருக்கு அன்று இரவு 01.00 மணிக்கு வந்தோம். நான் வரும்போது என் அப்பா பொக்காரரை அண்ணாமலை நகர் பிள்ளையார் கோவில் அருகில் உள்ள முச்சந்தியில் என் அப்பாவின் கைகளை பின்னால் கட்டி வைத்திருந்தார்கள். என் அப்பாவை சுற்றி ஊர்மக்கள் கூடியிருந்தார்கள். என் அப்பாவிடம் நான் கேட்டபோது என் அப்பா எதுவும் என்னிடம் சொல்லவில்லை, அ மைதியாக இருந்தார். அந்த இடத்தில் இருந்த என் அம்மாவிடம்கேட்டேன். என் அம்மாவிற்கு காது கேட்காது என்பதால் அவரும் அழுது கொண்டிருந்தார். நான் கேட்டதற்கு எதுவும் சொல்லவில்லை. அப்போது என் அண்ணன் சங்கர் சம்பவ சமயத்தில் இராமநாதபுரத்தில் குடியிருந்தார். அவரும் எனக்கு தகவல் கிடைத்ததுபோல் தகவல் கிடைத்து அங்கு 01.00 மணியளவில் வந்தார். நான் எங்கள் ஊர் தலைவர் குப்பமுத்து என்பவரிடம் கேட்டபோது அவர் என் அப்பா இந்திரா என்பவரது வீட்டிற்கு களவாட சென்றதாகவும், அதனால் கட்டி வைத்துள்ளோம் என்றும் சொன்னார். மேலும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்துள்ளதாகவும் அதை கட்டும்படியும் சொன்னார். ஊர்த்தலைவர் குப்பமுத்துதான் அபராதம் விதித்ததாக அவரே சொன்னார். மேற்படி குப்பமுத்து நீதிமன்றத்தில் கண்ணாடி அணிந்துள்ள நபர்தான். நான் என் அப்பாவிடம் ஊர்த்தலைவர் உள்ளிட்ட மக்கள் நீங்கள் இந்திரா வீட்டிற்கு களவாட சென்றதாக சொல்கிறார்களே என்று கேட்டபோது அதற்கு அவர் இந்திரா தன்னிடம் காதுகுத்துக்காக ரூ.15 ஆயிரம் வாங்கி இருந்ததாகவும், அதை திருப்பி கேட்டபோது வீட்டிற்கு வரச்சொன்னதாகவும், அங்கு சென்றதாகவும் சொன்னார். என் அப்பா போய் பணம் கேட்டதற்கு திருட வந்ததாக இந்திரா கூறியதின்பேரில் என் அப்பாவை கட்டி வைத்து அடித்ததாக என் அப்பா சொன்னார். நாங்கள் காலையில் பணத்தை கட்டிச்கொள்கிறோம் என்று சொல்லி என் அப்பாவை வீட்டிற்கு அழைத்து வந்தோம். வீட்டிற்கு வந்த என் அப்பா வலி தாங்க முடியவில்லை என்று சொன்னார். தன்னை எதிரிகள் அடித்ததாக சொன்னார். காலையில் பார்த்துக்கொள்ளலாம் அப்பொழுதே சொல்லியிருக்கலாமே என என் அப்பாவிடம் கூறிவிட்டு நான் படுத்து தூங்கிவிட்டேன். என் அப்பா காலை 06.00 மணிக்கு ஆர்எஸ் மங்களம் சென்று பூச்சி மருந்து வாங்கி பெருமாமடை அருகே உள்ள புளியமரம் அருகே குடித்துவிட்டு கிடக்கார் என ஆடு மேய்த்து கொண்டிருந்த என் பெரியப்பா உறவுமுறையான ஒரு நபர் சொன்னார். அந்த தகவல் எங்களுக்கு காலை 08.50 மணிக்கு கிடைத்தது. உடனே நான், என் அம்மாவும்

அங்கு சென்றோம். என் அப்பா உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார், தூக்கி மடியில் போட்டோம், உயிர்போய்விட்டது. அதன் பிறகு ஊர்மக்கள் வந்தார்கள். என் அப்பா இறந்த அரை மணிநேரத்தில் என் அண்ணன் சங்கர் ஆர்எஸ் மங்களம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரத்தை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

என் அப்பாவை கட்டி வைத்து அடித்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் விசாரணையின் போது என் அப்பாவை கட்டி வைத்திருக்கும்போது நான், என் அண்ணன், அம்மா அங்குஇருந்தோமா என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசாரிடம் எதிரிகள் என்னை கட்டி வைத்து அடித்தார்கள் என என் அப்பா என்னிடம் கூறினார் என சொன்னேனா என்றால் சொன்னேன். இந்திரா வீட்டிற்கு என் அப்பா கொடுத்த கடனை வாங்க சென்றதாக சொன்னார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என் அப்பா ஆர்எஸ் மங்களத்திற்கு காலை 06.00க்கு சென்று கடையில் பூச்சி மருந்து வாங்கி பெருமாமடை அருகே குடித்துவிட்டு மயங்கி கிடந்தார் எனவும், நாங்கள்போய் தூக்கியபோது இறந்துவிட்டார் எனவும், பின்னர் ஊர்க்காரர்கள் வந்தார்கள் எனவும் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் ஊர்த்தலைவரான குப்பமுத்துவிடம் விசாரித்தபோது அவர் என் அப்பா இந்திரா வீட்டில் களவாட சென்றதால் அவரை பிடித்து கைகளை பின்னால் கட்டி அடித்தோம் என சொன்னார் என சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் விசாரணையில் அன்று இரவு 12.00 மணிக்கு எனக்கும், என் அண்ணனுக்கும் தகவல் சொல்லி என் அப்பாவிற்கு சீரியசாக இருப்பதாக வரவழைத்து மேற்படி நடந்த மேட்டரை வையன் மகன் மூவேந்திரன் மூலம் தெரிந்து கொண்டோம் என சொல்லியுள்ளது சரியா என்றால் சரிதான். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.